# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 209/மா/2025**
**நாள்:10.04.2026**

S. சங்கரலிங்கம் மற்றும்
B. விஜயகுமார், சென்னை --- முறையீட்டு மனுதாரர்கள்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்கள்

(2) திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி,
சென்னை–19

சென்னை–600 081, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர், 6வது தெரு, கதவு எண் 39 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சங்கரலிங்கம் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண் 14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் ஆகியோரின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.05.2025 அன்று பெறப்பட்டு 209/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 081, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர், 6வது தெரு, கதவு எண் 39 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சங்கரலிங்கம் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண் 14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் ஆகியோர் தங்களது நாளிடப்படாத முறையீட்டு மனுவில் பின்வரும் புகாரினை தெரிவித்துள்ளனர்:-

"1. பொதுவாக சென்னை என்பது பரப்பளவில் மிக சிறியதான ஒரு பகுதியாக உள்ளது. சுமார் 1990ம் ஆண்டுகளில் சென்னையில் உள்ள அனைத்து தெருக்களிலும், சாலைகளிலும் தண்ணீர் லாரிகள் மிகவும் சர்வ சாதாரணமாக வந்து செல்லும் காலம் அது. ஆனால் தற்போதோ நிலைமையே வேறு. அரசாங்க அறிவுறுத்தல்களை மீறி கட்டப்படும் விதிமீறல் கட்டிடங்களை பற்றி கண்டுக் கொள்ளாத மாநகராட்சியில் உள்ள சில அதிகாரிகளாலும் இன்றைக்கு ஒவ்வொரு சாலைகளிலும் அவசர உதவி ஆம்புலன்ஸ் அல்லது ஆட்டோ சென்று வரவே மிகவும் சிரமமாக உள்ளது. ஒரு சில நபர்கள் தன்னுடைய சுலநலத்திற்காக பல்லாயிரம் மக்கள் கஷ்டப்படும் சூழல் நிகழ்ந்து கொண்டு தான் வருகிறது. ஒரு நபரின் லாபம், 100 பேருக்கு அது இடையூறாக உள்ளது.

2. ஆகவே சமூக ஆர்வலர்களாகிய நாங்கள் கடந்த 5 ஆண்டுகளாக சென்னை மாவட்டங்களில் பல பகுதியில் பல வீதிகளில் கட்டிடங்கள் தொடர்பாக பல ஆய்வுகள் நடத்தி வருகிறோம். மேலும் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக பொதுமக்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் என்ன இழப்புகள் ஆகியுள்ளது என்பதனை கண்காணித்து அதை பொதுமக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மேலும், அதிகாரிகளிடம் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக எடுத்துரைத்து வருகிறோம்.

3. அதில் ஒரு உதாரணமாக சென்னை–600 019, திருவொற்றியூர், ராஜா கடை, தாங்கல், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண் 1051, மண்டலம்–1ற்கு உட்பட்ட இடத்தில் அமைந்துள்ள திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி கட்டிடமானது எந்த ஒரு அனுமதியும் மற்றும் கட்டிட அனுமதியும் பெறாமல் G + 3 கட்டிடமாக உள்ளது. இது பல பிள்ளைகளின் உயிருக்கு உத்தரவாதம் இன்றி செயல்பட்டு வருகிறது. குறிப்பாக 2000ம் ஆண்டு கும்பகோணம் பள்ளி தீ விபத்து பிறகு எந்த தனியார் பள்ளியும் G + 3 ஆக இருக்க கூடாது என்றும், G + 2 ஆக இருக்க வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவு உள்ளது. ஆனால் தாங்கள் அதிகாரியாக இருக்கும் மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் மாநகராட்சி விதிமுறைகளை மீறி இந்த பள்ளியானது செயல்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக பலமுறை புகார் கொடுத்தும் தாங்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுமட்டுமின்றி அப்பள்ளியின் இடப்பற்றாக்குறை காரணமாக எண் 39/65, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தாங்கல், வசந்த நகர், ராஜா கடை, திருவொற்றியூர், சென்னை–600 019 அருகாமையில் அமைந்துள்ள நத்தம் புறம்போக்கு இடத்தை கையகப்படுத்தி அங்கு பள்ளி கட்டிடத்தை கட்ட ஆரம்பித்து உள்ளனர். இந்த கட்டிடம் தொடர்பாக எந்த ஒரு அனுமதியும் மாநகராட்சியிலும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடத்தினை உடனடியாக தடுத்த நிறுத்த வேண்டும் என்று பலமுறை புகார் அளித்துள்ளோம். ஆனால் மண்டல அதிகாரிகளும், வார்டில் பணிபுரியும் உதவி பொறியாளர்களும் பள்ளி நிர்வாகத்திடம் ரகசியமாக ஒப்பந்தம் வைத்துக் கொண்டு அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளதை ஆதரித்து வருகிறார்கள். இது சம்பந்தமாக பலமுறை அதிகாரிகள் மற்றும் உயர்அதிகாரிகள் என்று அனைவருக்கும் மனு நேரில் அளித்தும் இன்று வரையிலும் எந்த பயனும் இல்லை. இது போல் பலர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வரும் கலாச்சாரமானது பெருகி வருகிறது.

4. ஆனால் இதுநாள் வரை அந்த கட்டிடத்தின் மீதோ அல்லது அந்த கட்டிட உரிமையாளர் மீதோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மண்டலம் –1 அதிகாரிகள் காலம் தாழ்த்தி வருகிறார்கள். ஆனால் அதிகாரிகள் கட்டிட உரிமையாளரிடம் ரகசியமாக கூட்டு ஒப்பந்தம் பேசிக் கொண்டு இதனால் வரை நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள்.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி நடுவன் அமைப்பு இந்த மனுவினை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரியை உரிய விசாரணை மேற்கொண்டு எனக்கு உத்தரவு பிறப்பித்து வழங்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தனது 06.01.2026 நாளிட்ட கடிதம் ம.அ.1 ந.க. எண் 000118/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"மனுதாரரின் புகார் எண் 1

திரு. S. சங்கரலிங்கம் மற்றும் விஜயகுமார் என்பவர்கள் சென்னை 19 திருவொற்றியூர், ராஜாக்கடை, தாங்கல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் எண் 1051ல் அமைந்துள்ள திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி கட்டிடமானது எந்த ஒரு கட்டிட அனுமதி பெறாமல் G + 3 கட்டிடமாக உள்ளது. இது பல பிள்ளைகளின் உயிருக்கு உத்தரவாதம் இன்றி செயல்பட்டு வருகிறது. கும்பகோணம் பள்ளி தீ விபத்திற்கு பிறகு எந்த தனியார் பள்ளியும் G + 3 ஆக இருக்கக் கூடாது என்றும் G + 2 ஆக இருக்க வேண்டும் எனவும் நீதிமன்ற உத்தரவு உள்ளது. மாநகராட்சி விதி மீறி செயல்பட்டு வரும் இப்பள்ளி மீது புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

பதில்:–

திருவொற்றியூர் நெடுஞ்சாலை எண்.1051ல் இயங்கி வரும் திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி திருவொற்றியூர் நகராட்சியாக இருந்த போது பள்ளி கட்டிடம் கட்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் கட்டிட அனுமதி 3 தளங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. திட்ட வரைபட அனுமதி எண் C/4334/5A to D/2009 நாள் 23.02.2009 அதன் வரைபட நகல்கள் மற்றும் அனுமதி உத்தரவு ஆகியவற்றின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் தளங்களின் எண்ணிக்கை G + 2 ஆக இருக்க வேண்டும் எனவும், G + 3 உள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார். மனுதாரர் கோரிய தகவல் தவறானது ஆகும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019–ன்படி கல்வி நிறுவனங்களின் கட்டிடத்தின் உயரம் 18.30 மீட்டர் அனுமதிக்கப்பட்டதாகும். அனுமதிக்கப்பட்ட உயரத்தின்படியே இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. எனவே புகார்தாரர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, மனுதாரர் தெரிவித்தது போல் கட்டிட அனுமதி இன்றி செயல்பட்டு வருவதாக கூறிய தகவல் தவறானதாகும். எனவே இக்குற்றச்சாட்டினை ரத்து செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரரின் புகார் எண் 2

மேற்படி பள்ளி இடப்பற்றாக்குறையின் காரணமாக எண் 39/65 திருவொற்றியூர் நெடுஞ்சாலை தாங்கல் வசந்தா நகர், ராஜாக்கடை, திருவொற்றியூர், சென்னை–19 அருகாமையில் அமைந்துள்ள நத்தம் புறம்போக்கு இடத்தை கையகப்படுத்தி அங்கு பள்ளி கட்டிடம் கட்ட ஆரம்பித்துள்ளனர். இந்த கட்டிடம் தொடர்பாக எந்த ஒரு அனுமதியும் மாநகராட்சியில் பெறவில்லை எனவே அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடத்தினை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என பலமுறை புகார் அளித்தும் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

பதில்:–

மனுதாரரின் ஒருவரான திரு. S. சங்கரலிங்கம் என்பவர் இக்கட்டிடம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் பொது தகவல் அலுவலர்/செயற்பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–1 திருவொற்றியூர் அவர்களுக்கு மனு செய்து அவரின் மனு 01.04.2025 அன்று பெறப்பட்டது. இக்கட்டிடம் தொடர்பாக அவருக்கு 29.04.2025 அன்று பதில் வழங்கப்பட்டுள்ளது. நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் இருவரும் தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர். மேலும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள கட்டிடம் பள்ளி கட்டிடம் கட்ட STILT + 3 தளங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதி எண் PPA/WDC No.1/09671/2024 நாள் 07.01.2025 திட்ட அனுமதி மற்றும் வரைபடங்களின் நகல் அனைத்தும் தங்களின் பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளதை போல பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி இன்றி இக்கட்டிடம் கட்டப்படவில்லை. எனவே மனுதாரர்கள் தெரிவித்துள்ள தகவல் தவறான தகவலாகும். எனவே மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுகளை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர்கள், திரு. S. சங்கரலிங்கம் மற்றும் திரு. B. விஜயகுமார் ஆகியோர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"சென்னை–600 019, திருவொற்றியூர், ராஜா கடை, தாங்கல், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண் 1051, மண்டலம்–1ற்கு உட்பட்ட இடத்தில் அமைந்துள்ள திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி கட்டிடமானது வரைபடத்தில் உள்ளவாறு கட்டப்படவில்லை. எந்த ஒரு அனுமதியும் மற்றும் கட்டிட அனுமதியும் பெறாமல் 2007ம் ஆண்டு G + 3 கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. எந்த தனியார் பள்ளியும் G + 3 ஆக இருக்க கூடாது என்றும், G + 2 ஆக இருக்க வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவு 2009ல் இருந்துள்ளது. மேலும், இந்த பள்ளி அமைந்துள்ள இடத்தில் இரண்டு தொடர் கட்டிடங்கள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி அப்பள்ளியின் இடப்பற்றாக்குறை காரணமாக எண் 39/65, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தாங்கல், வசந்த நகர், ராஜா கடை, திருவொற்றியூர், சென்னை–600 019 அருகாமையில் அமைந்துள்ள நத்தம் புறம்போக்கு இடத்தை கையகப்படுத்தி அங்கு பள்ளி கட்டிடத்தை கட்ட ஆரம்பித்து உள்ளனர். அப்பள்ளி அமைந்துள்ள வாளகத்திற்குள் அரசுக்கு சொந்தமான இடம் உள்ளது. அது குறித்து தகவல் தர மறுத்துவிட்டனர். பள்ளி நிர்வாகத்தினர் பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு விதிப்படி OSR இடம் அளிக்க வேண்டும். ஆனால் அளிக்கவில்லை. இப்பள்ளியின் கட்டிடத்திற்கு அவசர காலத்தில் வெளியே செல்வதற்கு வழி வகை செய்யப்படவில்லை. மாணவர்களுக்கு போதுமான இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேற்கண்ட பள்ளி போலியான ஆவணங்களின் மூலம் அனுமதி பெற்றுள்ளனர். இது சம்பந்தமாக Enforcement நடவடிக்கை எடுக்க கோரியும், மற்றும் பலமுறை அதிகாரிகள் மற்றும் உயர்அதிகாரிகள் என்று அனைவருக்கும் மனு நேரில் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது மட்டும் இல்லாமல் அவசர வழி ஏதும் இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே, வீதி மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளமாறும், நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.''

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல 1–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"திருவொற்றியூர் நெடுஞ்சாலை கதவு எண்.1051ல் இயங்கி வரும் திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி திருவொற்றியூர் நகராட்சியாக இருந்த போது பள்ளி கட்டிடம் கட்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் 3 தளங்களுக்கு கட்டிடம் கட்ட அனுமதி 23.03.2009 அன்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியவாறு தளங்களின் எண்ணிக்கை G + 2 ஆக தான் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருப்பது தவறானதாகும்.

மேற்கண்ட பள்ளியின் கட்டிடம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி கல்வி நிறுவனங்களின் கட்டிடத்தின் உயரம் அனுமதிக்கப்பட்ட 18.30 மீட்டர் உயரத்திலேயே கட்டப்பட்டுள்ளது. எனவே, பள்ளி கட்டிடம் வரைபடத்தின்படியே கட்டப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடம் STILT + 3 தளங்களுடன் கட்ட திட்ட அனுமதி 07.01.2025 அன்று பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கட்டிடம் கட்டுவதற்கான OSR நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அளிக்க வேண்டும் என்பது ஒரு குறிப்பிட்ட பரப்பளவு உள்ள கட்டிடத்திற்கு மட்டுமே பொருந்தும். அதன்படி மேற்கண்ட பள்ளி நிர்வாகத்தினர் OSR நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அளித்த வரைபடத்தில் OSR நிலம் குறிப்பிடப்படவில்லை.

திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி நிர்வாகத்தினர் தங்களுடைய பட்டா நிலத்திலேயே பள்ளி கட்டிடம் கட்டியுள்ளார்கள். மேலும், மனுதாரர் விசாரணையின் போது தெரிவித்துள்ள Annexure கட்டிடம் ஏற்கனவே அனுமதி பெற்ற பள்ளி கட்டிடத்திற்குள் வரவில்லை. அது அருகில் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. அக்கட்டிடத்திற்கு எந்த ஒரு அனுமதியும் பெறப்படவில்லை.

எனவே, மேற்கண்ட பள்ளி கட்டிடமானது சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் அளிக்கப்பட்ட திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கின்றோம்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி நிர்வாகத்தின் சார்பாக திருத்தங்கல் நாடார் உறவின் முறையின் செயலாளர் மற்றும் தாளாளர் ஆகியோர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"மனுதாரர் தங்களது புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச் சாட்டுகளை முழுமையாக மறுக்கிறோம்.

1) எங்கள் பள்ளி கட்டிடம் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதியின்படி தான் கட்டப்பட்டுள்ளது.

2) எங்கள் பள்ளி கட்டிடம் எவ்வித அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லை.

3) எங்கள் பள்ளி வளாகத்தின் அருகில் உள்ள இடத்தில் கட்டப்பட்டு உள்ள Annexure கட்டிடம் கொரோனா காலத்தில் கட்டப்பட்டதால், அனுமதி பெறப்படவில்லை. இக்கட்டிடம் வரன்முறை செய்வது தொடர்பாக சீராய்வு மனு தமிழக அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புகை நகலினை இணைத்துள்ளோம்.

4) தற்போது கூடுதலாக கட்டப்பட்டுவரும் G + 3 கட்டிடத்திற்கும் சென்னை வளர்ச்சி குழுமத்தின் அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டு வருகிறது.

எனவே, எங்கள் பள்ளி கட்டிடமானது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் அளிக்கப்பட்ட அனுமதியின்படியும், எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாமல் கட்டப்பட்டுள்ளதால், மனுதாரர்களின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.''

8. இந்நிலையில், மேற்கண்ட புகார் மனுவில் மனுதாரர் தெரிவித்த, திருவொற்றியூர் நெடுஞ்சாலை கதவு எண்.1051ல் இயங்கி வரும் திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளியில் உள்ள Annexure கட்டிடத்தினை கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதை வரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 80–A–ன் கீழ் அரசுக்கு (வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை) சீராய்வு மனு அளிக்கப்பட்டு நிலுவையில் உள்ளதாக கட்டிட உரிமையாளர் தெரிவித்திருப்பதை உறுதி செய்து, மேற்படி சீராய்வு மனுவின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

9. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தனது 20.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"கதவு எண் 1051–ல் கட்டப்பட்டுள்ளதிருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளியின் Annexure கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது கட்டிடத்தை பூட்டி சீல் வைக்கும் நோட்டீஸ் பெருநகர சென்னை மாநகராட்சியால் 17.08.2021–ல் பள்ளி நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டதன் பேரில், பள்ளி நிர்வாகம் தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 80–A–ன் கீழ் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு சீராய்வு மனு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக 17.05.2022 அன்று விசாரணை நடைபெற்று வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை தொடர்பாக கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. (Letter No.17688/UD-VI(I) 2021-6 dated 26.5.2022).

"சம்பந்தப்பட்ட கட்டிடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகள் ரத்து செய்யப்படுகின்றன என்று அரசு இதன் மூலம் உத்தரவிடுகிறது. மேலும் முறையீட்டாளர் அனைத்து விவரங்களையும் ஆவணங்களையும் இரண்டு மாத காலத்திற்குள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும்,1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் கிராமத் திட்டமிடல் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் அனைத்து விதிமீறல்களையும் குறிப்பிட்டு ஒரு புதிய அறிவிப்பை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அரசு உத்திரவிடுகிறது".

மேற்கண்டுள்ள உத்தரவின்படி முறையீட்டாளர் அனைத்து ஆவணங்களையும் பெருநகர சென்னை மாநகராட்சி நகர அமைப்புத் துறையில் சமர்ப்பித்து அனுமதி பெற தவறிவிட்டார். (பள்ளி கட்டிடங்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் உள்ள நகர அமைப்பு துறையால் மட்டுமே வழங்கப்படும்). எனவே தற்போது அக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் G.O. MS NO.195 Dated 05.11.2022–ன் வழிகாட்டுதலின்படி Form I Notice For Production of Documents, அறிவிப்பு நாள் 17.03.2026 அன்று பள்ளி கட்டிட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. உரிய வழிமுறைகளை பின்பற்றி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

10. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள், செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி சார்பாக திருத்தங்கல் நாடார் உறவின் முறையின் செயலாளர் மற்றும் தாளாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–600 019, திருவொற்றியூர், ராஜா கடை, தாங்கல், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண் 1051, மண்டலம்–1ற்கு உட்பட்ட இடத்தில் அமைந்துள்ள திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி கட்டிடமானது வரைபடத்தில் உள்ளவாறு இல்லாமலும், அனுமதி

மற்றும் கட்டிட அனுமதி பெறாமலும் G + 3 கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது என்பதும், நீதிமன்ற உத்தரவுப்படி பள்ளிக் கட்டிடம் G + 2 ஆகத் தான் இருக்க வேண்டும் என்பதும், இந்த பள்ளி அமைந்துள்ள இடத்தில் இரண்டு தொடர் கட்டிடங்கள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது மட்டுமின்றி, அப்பள்ளியின் இடப்பற்றாக்குறை காரணமாக எண் 39/65, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தாங்கல், வசந்த நகர், ராஜா கடை, திருவொற்றியூர், சென்னை–600 019 அருகாமையில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு இடத்தை கையகப்படுத்தி அங்கு பள்ளிக் கட்டிடத்தை கட்டி உள்ளார்கள் என்பதும், பள்ளி நிர்வாகத்தினர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிப்படி OSR இடம் அளிக்காமலும், இப்பள்ளியின் கட்டிடத்திற்கு அவசர காலத்தில் வெளியே செல்வதற்கு வழி வகையில்லாமலும், மேற்கண்ட பள்ளி போலியான ஆவணங்களின் மூலம் அனுமதி பெற்று கட்டியுள்ளனர் என்பதும், இது குறித்து பலமுறை அதிகாரிகள் மற்றும் உயர்அதிகாரிகள் என்று அனைவருக்கும் மனு நேரில் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், வீதி மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளமாறும், நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரர்களின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

திருவொற்றியூர் நெடுஞ்சாலை கதவு எண்.1051ல் இயங்கி வரும் திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி திருவொற்றியூர் நகராட்சியாக இருந்த போது பள்ளி கட்டிடம் கட்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் 3 தளங்களுக்கு கட்டிடம் கட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிடம் வரைபடத்தின் படியும் கட்டப்பட்டுள்ளது என்பதும், மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி கல்வி நிறுவனங்களின் கட்டிடத்தின் உயரம் அனுமதிக்கப்பட்ட 18.30 மீட்டர் உயரத்திலேயே கட்டப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடம் STILT + 3 தளங்களுடன் கட்ட திட்ட அனுமதி 07.01.2025 அன்று பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஒரு கட்டிடம் கட்டுவதற்கான OSR நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அளிக்க வேண்டும் என்பது ஒரு குறிப்பிட்ட பரப்பளவு உள்ள கட்டிடத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதும், அதன்படி மேற்கண்ட பள்ளி நிர்வாகத்தினர் OSR நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அளித்த வரைபடத்தில் OSR நிலம் குறிப்பிடப்படவில்லை என்பதும், திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி நிர்வாகத்தினர் தங்களுடைய பட்டா நிலத்திலேயே பள்ளி கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்பதும், மேற்கண்ட பள்ளி கட்டிடமானது சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் அளிக்கப்பட்ட திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் விசாரணையின் போது தெரிவித்துள்ள, கதவு எண் 1051–ல் கட்டப்பட்டுள்ள Annexure பள்ளிக் கட்டிடம் ஏற்கனவே அனுமதி பெற்ற பள்ளி கட்டிடத்தின் வளாகத்திற்குள் வரவில்லை என்பதும், அது அருகில் உள்ள இடத்தில் அமைந்துள்ளதால், அக்கட்டிடத்திற்கு எந்த ஒரு அனுமதியும் பெறப்படவில்லை என்பதும், அவ்வாறு அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்கும் நோட்டீஸ் பெருநகர சென்னை மாநகராட்சியால் 17.08.2021–ல் பள்ளி நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டதன் பேரில், பள்ளி நிர்வாகம் தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 80–A–ன் கீழ் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு சீராய்வு மனு அளிக்கப்பட்டது தொடர்பாக, 17.05.2022 அன்று விசாரணை நடைபெற்று வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை தனது கடித எண் 17688/UD-VI(I) 2021-6 நாள் 26.5.2022ல் சம்பந்தப்பட்ட கட்டிடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகள் ரத்து செய்யப்படுகின்றன என்று உத்தரவிட்டும், முறையீட்டாளர் அனைத்து விவரங்களையும் ஆவணங்களையும் இரண்டு மாத காலத்திற்குள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு

நகர மற்றும் கிராமத் திட்டமிடல் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் அனைத்து விதிமீறல்களையும் குறிப்பிட்டு ஒரு புதிய அறிவிப்பை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்திரவிடப்பட்டது என்பதும், அவ்வுத்திரவின்படி, இரண்டாம் எதிர்மனுதாரர் அனைத்து ஆவணங்களையும் பெருநகர சென்னை மாநகராட்சி நகர அமைப்புத் துறைக்கு சமர்ப்பிக்காததால், தற்போது அக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் G.O. MS NO.195 Dated 05.11.2022–ன் வழிகாட்டுதலின்படி Form I Notice For Production of Documents, அறிவிப்பு 17.03.2026 அன்று பள்ளி கட்டிட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டு, உரிய வழிமுறைகளை பின்பற்றி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கைகள், செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளரின் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தங்கள் பள்ளிக் கட்டிடம், பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதியின்படியும், எவ்வித அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், தங்கள் பள்ளி வளாகத்தின் அருகில் உள்ள இடத்தில் கட்டப்பட்டு உள்ள Annexure கட்டிடம் கொரோனா காலத்தில் கட்டப்பட்டதால், அனுமதி பெறப்படவில்லை என்பதும், இக்கட்டிடம் வரன்முறை செய்வது தொடர்பாக சீராய்வு மனு தமிழக அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், தற்போது கூடுதலாக கட்டப்பட்டுவரும் G + 3 கட்டிடத்திற்கும் சென்னை வளர்ச்சி குழுமத்தின் அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டு வருகிறது என்பதும். எனவே மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கோரியிருப்பது இரண்டாம் எதிர்மனுதாரரான திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி நிர்வாகத்தின் சார்பாக திருத்தங்கல் நாடார் உறவின் முறையின் செயலாளர் மற்றும் தாளாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, கதவு எண்.1051ல் இயங்கி வரும் திருத்தங்கல் நாடார் வித்தியாலயா பள்ளி தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி கட்டிடத்தின் உயரம் அனுமதிக்கப்பட்ட 18.30 மீட்டர் உயரத்திலேயே, பட்டா நிலத்தில், வரைபடத்தின்படி 3 தளங்கள் கட்டப்பட்டுள்ளது என்றும், ஒரு கட்டிடம் கட்டுவதற்கான OSR நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அளிக்க வேண்டும் என்பது ஒரு குறிப்பிட்ட பரப்பளவு உள்ள கட்டிடத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால், இவ்விதி இப்பள்ளிக்கு பொருந்தாது என்பதும், மனுதாரர் விசாரணையின் போது தெரிவித்துள்ள Annexure கட்டிடம் ஏற்கனவே அனுமதி பெற்ற பள்ளி கட்டிடத்தின் வளாகத்திற்குள் வரவில்லை என்றும், இந்த Annexure கட்டிடம் கொரோனா காலத்தில் கட்டப்பட்டதால், அனுமதி பெறப்படவில்லை என்பதால், அதனை வரன்முறை செய்வது தொடர்பாக சீராய்வு மனு தமிழக அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது என்று இரண்டாம் எதிர்மனுதாரரான திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி நிர்வாகத்தின் சார்பாக திருத்தங்கல் நாடார் உறவின் முறையின் செயலாளர் மற்றும் தாளாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், பள்ளி நிர்வாகத்தின் சீராய்வு மனு குறித்து 17.05.2022 அன்று விசாரணை நடைபெற்று வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை தொடர்பாக, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கடித எண் 17688/UD-VI(I) 2021-6 நாள் 26.5.2022ல் சம்பந்தப்பட்ட கட்டிடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகள் ரத்து செய்யப்படுகின்றன என்று உத்தரவிட்டும், முறையீட்டாளர் அனைத்து விவரங்களையும் ஆவணங்களையும் இரண்டு மாத காலத்திற்குள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் கிராமத் திட்டமிடல் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் அனைத்து விதிமீறல்களையும் குறிப்பிட்டு ஒரு புதிய அறிவிப்பை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட உத்திரவின்படி, பள்ளி நிர்வாகத்தினர் குறிப்பிட்ட ஆவணங்களை பெருநகர சென்னை மாநகராட்சி நகர அமைப்புத் துறைக்கு சமர்ப்பிக்காததால், அக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் G.O. MS NO.195 Dated 05.11.2022–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின்படி Form I Notice For Production of

Documents, அறிவிப்பு 17.03.2026 அன்று பள்ளி கட்டிட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், உரிய வழிமுறைகளை பின்பற்றி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தன்னுடைய 20.03.2026 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்தவாறு, உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. சங்கரலிங்கம்,
கதவு எண் 39, 6வது தெரு, நேதாஜி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை–600 081.

(2) திரு. B. விஜயகுமார்,
கதவு எண் 14/15, சால்ட் குறுக்குத் தெரு,
துர்கா தேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

(3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(4) உதவி ஆணையர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவொற்றியூர், சென்னை–600 019.

(5) செயலாளர் / தளாளர்,
திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி,
எண் 1051, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
தாங்கல், ராஜா கடை, திருவொற்றியூர்,
சென்னை–600 019.

(6) செயலாளர் / தளாளர்,
திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி,
எண்.113, P.A.N.இராஜரத்தினம் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 021.

(7) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை - 600 032